உ

பரமபதிதுணை.

அறுபத்துமூன்று நாயன்மார்களில்
ஒருவராகிய

சிறுத்தொண்ட
நாயனார் திவ்விய சரித்திரக் கும்மி.

இஃது
பாண்டியநாட்டிற் சிறப்புற்றோங்கிய
மதுரை க்ஷேத்திரத்தில்
சோமசுந்தர • அருள்பெற்ற
மதுரகவி
பரங்கிரிவேல வியற்றியதை
மதுரை-இராமாயணச்சாவடித்தெரு
இராமசாமிக் கோனாரவர்கள் குமாரன்
குருசாமிக் கோனாரவர்கள்
வேட்டுப்பிரதிக் கிணங்க

மதுரை புதுமண்டபம் புஸ்தகவியாபாரம்
ஸ்ரீ முத்தையபிள்ளையவர்களால்
கிடைத்தவேட்டுப்பிரதியைக்கொண்டு
பூ - சு - குப்புசாமி முதலியாரால்,

பூவிருந்தவல்லி,
சுந்தரமுதலியாரது,
சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்...

உ

…மபதிதுணை.

அறுபத்துமூன்று நாயன்மார்களில்

ஒருவராகிய

சிறுத்தொண்டநாயனார்

திவ்வியசரித்திரக்கும்மி.

இஃது

பாண்டியநாட்டிற் சிறப்புற்றோங்கிய

மதுரை க்ஷேத்திரத்தில்

சோமசுந்தரர் அருள்பெற்ற

மதுரகவி

பரங்கிரிவேலியற்றியதை

மதுரை-இராமாயணச்சாவடித்தெரு

இராமசாமிக் கோனார்வர்கள் குமாரன்

குருசாமிக்கோனாரவர்கள்

ஏட்டுப்பிரதிக் கிணங்க

மதுரை புதுமண்டபம் புஸ்தகவியாபாரம்

S. முத்தையபிள்ளையவர்களால்

கிடைத்தவேட்டுப்பிரதியைக்கொண்டு

பூ. ச. குப்புசாமி முதலியாரால்,

பூவிருந்தவல்லி.

சுந்தரமுதலியாரது,

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1890.

Registered Copy Right.

ரிஜஸ்தர் அறிவிப்பு.

இதனால் அச்சியந்திரசாலைத் தலைவர்களுக்குத் தெரியப்படுத்துவது, மதுரகவி பாங்கிரிவேலியற்றிய இந்த சிறுத்தொண்டன் கும்மியை ஷை மாநகர் மதுரை இராமசாமிக் கோனாரவர்கள் குமாரன் குருசாமிக்கோனாரவர்களாலும், ஷை ஊர் புதுமண்டபம் புஸ்தகவியாபாரம் ச. முத்தையபிள்ளையவர்களாலும், கிடைத்த இந்த பிரதியை சென்னை புரசை-வல்லம்பங்காருசெட்டி வீதியில் 3-வது நெம்பர் வீட்டிலிருக்கும் சுந்தரவிலாச அச்சுக்கூடத்தலைவர் பூ. சு. குப்புசாமிமுதலியார் அனுமதியின்றி அச்சிற் பதிப்பிக்கின்றவர்களும் அச்சுக்கூடத்தலைவர்களும் 1887 வருஷத்து 25-வது, ஆக்டின் 20-வது, பிரிவில் 6-வது, விதியின்படி ஷையார்களால் செய்யும் நஷ்டத்திற் குத்திரவாதிகளாகவும், சிவில்கோர்ட்டார் அவர்கள் கேள்விக்கு ஜவாப்தாரிகளாகவு மிருப்பார்களென்று யாவரும் தடையின்றி கவனிப்பீர்களாக.

இப்படிக்கு,

☞ பூ. சு. குப்புசாமிமுதலியார்,

விளம்பரம்.

இதனால் சகலமானகனவான்களுக்குத் தெரிவிப்பது, யாதெனில் இப்போது நூதனமாய் அச்சிட்டுவரும் புத்தகங்கள் நூதனப்பிரிதி சுந்தரிகலியாண அம்மானை, இராமாயணஅம்மானை, பாரதஅம்மானை, பாகவத அம்மானை, திருவிளையாடலம்மானை, பஞ்சபாண்டவர் அஞ்ஞாதவாசஅம்மானை, அழகர்பேரில் வர்ணிப்பு, கம்பர் பாடிய பாரதக்கும்மி-பி-அப்பர்வடும், இராமாயணக்கும்மி, பாகவதக்கும்மி, மீனாட்சியம்மன் திக்குவிஜயகும்மி, மார்க்கண்டேயர்கும்மி, குழந்தைவேல்க்கோனார்பாடிய குருட்சேத்திரக்கும்மி, திருநாளைப்போவாரென்னும் நந்தனார்கும்மி, இயற்பகைநாயனார்கும்மி, தாதுவருஷத்து பஞ்சக்கும்மி. இராமாயணமுளைப்பாட்டு, வள்ளியம்மை முளைப்பாட்டு, செல்லாயிஅம்மாள்முளைப்பாட்டு, மீனாட்சிசுந்தரம்பிள்ளைபாடிய சிவநாமக்கீர்த்தனை, வாணியக்கவிராயர்பாடிய சாவடிச்சிந்து, இவையெல்லாமச்சிட்டுக்கொண்டுவருகிறபடியால் மதுரை புதுமண்டபம் புஸ்தக வியாபாரம் ச. முத்தையபிள்ளையவர்களிடத்திலும். இ. ரா. ம. குருசாமிக்கோனாரிடத்திலும் வேண்டியவர்கள் விலைசசமாய் பெற்றுக்கொள்ளலாம்.

உ

பரமபதி துணை.

{ மதுரை தாணப்புழுதனியா ரக்கிராமம் நமசிவாயப்பிள்ளை
அவர்கள்குமாரர் கந்தசாமிபிள்ளையவர்களியற்றிய }

சாற்றுக்கவி.

நாட்டிற்புகழ்பெற்ற திருமகள்வாழும் நற்றிருச்செங்
காட்டிற்சிறுத்தொண்டன் மேற்கொம்மிபாடிக்கனதையுற்ற
பாட்டிற்சிறந்தமெய்ப் பாவலனான பாங்கிரிவேல்
சூட்டியசெந்தமிழ் தேனுறுமென்றேயிதனைச் சொல்லலாமே.

{ மதுரையைச்சேர்ந்த மாட்டியாள் பத்துக்கிராமம்
சாந்துலிங்கநாயக்கர்குமாரர் கந்தசாமிக்
கவிராயரவர்களியற்றிய }

சாற்றுக்கவி.

அலைகடற்முழுந்தொழிசெங்காட்டுத்தொண்டன் அறுதெருமை
அலைகடல்சூழ்புவிமனிதருக்கேகும்மியாயுரைத்த
அலைகடல்தன்னையளைந்தோன்குமரனருளதுபெற்
றலைகடற்கல்வியுணர்வேலன்செய்யவமுர்தமிதே.

{ ஷை. கிராமம் குட்டிசேருவைகாரக் கோனாரவர்கள்
புத்திரர் உபாத்தியாயர் இராமகிருட்டினக்
கோனாரவர்களியற்றிய
சாற்றுக்கவி. }

எத்திசையும்புகழ்பெற்ற திருச்செங்காட்டங்குடியி லிருந்துமேதான்
முத்திபெற்றசிறுத்தொண்ட முனிவிருட சரிதைதனைக்கும்மியாக
சத்திசிவனருள்பாலன் சண்முகவேலருள்பெற்ற சமர்த்தன் திவ்விய
புத்திமிகும்பாங்கிரிவேல் செந்தமிழாலுரைத்தமெனபுகன்றான்மாதோ,

{ ஷை கிராமம் கருப்பணபிள்ளையவர்கள் குமாரர்
வீரணபிள்ளையவர்களியற்றிய
சாற்றுக்கவி. }

புண்ணியம்புரிந்துஇந்தப் புவிமிசைக்கீர்த்திதன்னை
நண்ணியதொண்டர்தம்மில் நற்சிறுத்தொண்டன்கும்மி
மண்ணிருக்கணைந்[illegible]சாலேன் மகன்பதமறவா வேலன்
பண்ணியசெய்[illegible]புள்[illegible]தமெனு பகருங்காவமுர்தந்தானே.

உ

பரமபதிதுணை.

அறுபத்துமூன்று நாயன்மார்களில்

ஒருவராகிய

சிறுத்தொண்ட நாயனார்

திவ்வியசரித்திரக் கும்மி.

செண்பகமல்லிகைப் பூச்சொரியுந்திருச்
செங்காட்டங்குடி தன்னில்வளர்
அன்புள்ளபக்தன் சிறுத்தொண்டன்மீதினி
லானந்தக்கும்மி தமிட்பாட, 1

ஆதியிலேசிறுத் தொண்டன்செய்தர்மக்
கருளிலங்குங்கும்மிப் பாட்டுரைக்க
மேதினியோர்புகழ்த் தேறும்பரங்கிரி
வேலன்கணபதி காப்பாமே, 2

வாராகுங்கொங்கை மின்னாள்திருநங்கை
மணாளன்செய்யுந்தாம மாகதையை
நிராளமாய்க்கும்மிப் பாட்டுரைக்கவெண்
டாமரையாள்பதன் காப்பாமே. 3

சிறுத்தொண்டராஜன் கதைப்பயனையிந்தச்
சிமையிலுள்ளோர் மனமகிழ
அருட்பெருகுங்கும்மிப் பாட்டுரைக்க எங்க
ளாதிசிவன்பத மேதுணையே, 4

வாரிதனிற்றுயி லும்பெருமான்மலர்ப்
பாதமென்னுருஞ் சிரசில்வைத்து
பார்தனிலேசிறுத் தொண்டன்மீதில்நன்றாய்ப்
பாடியேகும்மி யடியுங்கொடி. 5

விம்மிப்பணைத்த முலையாளே நீங்கள்
வேடிக்கையாகவே எல்லவரும்
கும்மியடிக்கவே வாருங்கடி நல்ல
கோதையரொன்றாகச் சேருங்கொ[illegible], 6

கங்களவல்லி விசாலாட்சி நல்ல
மாணிக்கவல்லி சுமுகவல்லி
சிங்காரமான வதனப்பெண்மணி நீங்கள்
சேயிழையெல்லோரும் வாருங்கடி. 7

கண்மணிகொங்கை யழகுமுந்தேநல்ல
கன்னிபரமேசோனை யின்னாசே
உச்சிதமாகிய சந்நிதனேகீக்க
பொன்னம்பதுமிபண்களும் வாருங்கொடி. 8

வாழ்வுபெருகச் சிறுத்தொண்டநாட்டினில்
வாங்குடமெல்லாந் தழைத்தோங்க
நாளொன்றுக்காயிரம் பேர்தனக்கன்னம்
நடத்துங்கும்மிசொல்லக் கேளுங்கொடி. 9

செந்நெல்விளையுந் திருவளருந்திருச்
செங்காட்டங்குடி நற்றலத்தில்
தன்னிலையாகிய மாமாத்திரனெனும்
நாதன்மறையவர் தன்குலத்தில், 10

வந்துதித்துப்பாஞ் சோதியாரென்னவே
வாழ்த்திடயாவரும் நாமம்பெற்று
அந்தணர்போற்று மறுவிதசாஸ்திரம்
ஆகமநூல்மறை யாவுங்கற்று 11

சிந்தைதனிற்சதா தெய்வஞ்சிவனெனத்
தேர்ந்துமேபக்தி தாய்த்தினமும்
வந்தனையாகவே வாழ்ந்தச்சிவபெரு
மானெனவே மறவர்மனமும்; 12

சொல்லக்கேள்வியுற்ற நல்லவாரிய
சோழராசனு மழைத்தவனை
வல்லவனென்று மகிழ்ந்துநீயென்னுடை
மந்திரியாயிருமென்றுரைத்தார் 13

மன்னனுரைத்தவ சாமல்வாத்த
மந்திரியாகவே தானிருந்தும்
தன்னையமாக இருந்திடவேபின்பு
ராஜனும்சண்டைக்கித் தான்வச்சே; 14

இன்றுநான்போயந்த ராசன்தனைசெயித்
தேகிவாரேனென் றாதானுரைத்து
நன்றியுடனவர் தானடந்து இங்கே
காடிபேவந்தசேனர் சேனையைக் 15

சிந்தைமகிழ்வுடன் சோழனைநோக்கியே
வந்திடும்பாகனைத் தான்செயித்து
சந்தோஷமாக அவன்பொருளையெல்லாம்
தான்கொண்டுவந்தார் சோழன்பதியே 16

மன்னவன்சோழன் மனமகிழ்ந்தேநல்ல
மந்திரியையெதிர் கொண்டழைத்தே
முன்னமெனக்கடங் காமலாசாண்ட
மூர்க்கனையென்னமாய் நீர்ஜெயித்தீர் 17

என்றுசோழமகா ராசனுரைக்கவே
எல்லாஞ்சிவன்செய லாவதல்லால்
வென்றுவரவென்னா லாகுமோவென்றவர்
வீரபராக்கிரமஞ் சொல்லாமல் 18

சிவன்செயலல்லா லிவன்செயலேதென்று
செப்பும்பரஞ்சோதி யார்தனையே
தவஞ்செயுமாபெரி யோனென்றறிந்தவர்
தான்சொலுவார்சோழ ராசனுந்தான் 19

இத்தனைநாளெனக் கேவல்செய்குற்ற
மெல்லாம்பொறுத் திநீர் கொண்டுவந்த
அத்தனைகோடி பணத்தையுங்கொடுத்
தன்புடனுங்களூர் சேருமென்று 20

விருப்பமுடன்சோழ ராஜனுமாத்துப்பின்
வேணதிரவிய முங்கொடுத்து
அருட்பெருகுந்திருச் செங்காட்டூரினி
லன்னதானஞ்செய் திருமெனவே 21

எண்ணியேராஜன் விடைகொடுக்கத்தொண்ட
ரீசன்செயலென வேமகிழ்ந்து
புண்ணியவான்சிறுத் தொண்டரிவரெனப்
பூசான்போய்வாழ்ந் திருக்கலுற்றார், 22

பத்தினியாருடன் சந்தனநங்கையும்
பாங்கியும்வாழ்ந்து வரும்போது
புத்திரன்பிறக்கச் சீராளனென்றுபேர்
புண்ணியவானிட்டா சப்போது, 23

பூலோகதர்ம பரிபாலனுமந்தப்
புண்ணியவான்சிறுத் தொண்டருந்தான்
பாலுடனெய்தயி ரன்னங்களும்பர
தேசிகள்சாப்பிட் டினிப்பார 24

ஆணிப்பொன்னாற்செய்த கோபுரமண்டபம்
அந்தணர்வாழ்திரு வீதிகளும்
மாணிக்கரத்தின வயிரமிழைத்திட்ட
மாளிகையில் பிரக்கியாதிகளும் 25

முத்துச்சரங்கள் பவழங்கோமேதக்
மொய்த்திருக்குஞ்சித்திரக்கூடங்களும்
சற்றும்விலைமதிக் காதமரகதத்
தாழ்செய்திடுங்கன்னி மாடங்களும் 26

சந்திரகாந்தக்கல் லாலேயமைத்திட்ட
சுந்தரமாகிய மேடைகளும்
விந்தையதாகவே கந்தபரிமளம்
வீசுகின்றதென்றல் வாடைகளும் 27

அன்னக்கொடிகட்டுஞ் சத்திரமும்வெகு
ஆண்டிகட்கன்னம் படைக்கவென்று
பன்னகசாலையும் நந்தவனங்களும்
பற்பலவாவியுமுண்டுபண்ணி 28

பாலனைப்பள்ளியி லேகவைத்தாரிவர்
பைங்கிளிக்கைச்சோறு பொங்கவைத்தார்
வேலையில்லாதன்னந் தான்கொடுத்தார்மிக்க
வேள்விமிகவு முடித்துவைத்து 29

செப்பமதாகச் சிறுத்தொண்டநாட்டினிற்
ஜெயகண்டிசங்குகள் தான்முழங்கத்
தப்பிதம்வாராமை யன்னங்கொடுத்தவர்
தாரணியெங்குஞ் செலுத்துகையில் 30

அப்படியாக்கொத்த பக்தனைச்சோதிக்க
வன்றுணிலாதி பரமசிவன்
எப்படிச்சோதிக்க லாமெனவெண்ணி
யேகப்பைரவர் வேடங்கொண்டு 31

விரித்தசடையும் புலித்தோலும்வீர
வெண்டையங்கா லிலணிந்துகையில்
பருத்ததண்டுந் திருப்புத்தகங்கொண்டு
பாதைவழியே நடந்தவர், 32

பன்னகம்பூணும் பரமசிவனைத்தப்
பக்தன் நிலைமையறியவென்று
அன்னமென்றொருவர் வாராமலின்று
அமுதாகளுஞ்செலவில்லாமல் 33

ஏகபாரப மேலோகமுண்டாக்கிய
    ஈஸ்பரனுமொரு விந்தையதாய்
மாய்கையாயன்னைறக்கி லூர்பரதேசி
    வழியிலுங்காணுமற் செய்தனனே 34

இந்தவிதமாக ஈசன்செய்யக்கொண்ட
    நில்லில்நடக்கிற செய்திதனைக்கேள்
சந்தனங்கையே சாதங்கறிவகை
    சல்லியதாகச் சமையுமென்றார் 35

என்றைக்குமன்னஞ் சமைக்கிறதில்மிக
    இன்பமதாகச் சமைத்துவைத்து
நன்றெனக்காரியம் பார்த்திருந்தாரப்பால்
    நாயகியாருமங் கோடிவந்து 36

அன்னங்கறிகள் சமைத்தாச்சுஇங்கே
    ஆண்டிகளின்னம் வரக்காணோம்
மன்னவரேயப தேசிகளைக்கண்டு
    வாகாயழைத்துமே வாருமென்றாள் 37

பைங்கிளிசொன்ன மொழிகேட்டப்பா
    தேசிவரும்பாதை தன்னில்வந்து
எங்கெங்குந்தேடியுங் காணுமல்லா
    மங்கையர்தன்னிடம் வந்துசொல்வார் 38

ஏதுதவக்குறை செய்தோமோவென்னே
    இன்றைக்கோராண்டியுங் காணோமே
பாதைதெருத்திண்ணை வீதியில்தேடியார்
    பண்டாரந்தன்னையுங் காணோமே 39

ஆண்டியையிங்கு அடித்தோமோபெண்ணே
    அன்னமளிக்காமல் செய்தோமோ
வேண்டியஆண்டி நிதம்வருவாரடி
    மெல்லியரோ திருநங்கையரே; 40

என்னதவக்குறை செய்தோமென்றாப்போ
    தெங்கள் திருநங்கை யேதுசொல்வாள்
மன்னவரேயென் மணவாளா நம்
    மனதில்வருங்குற்ற மொன்றுமில்லை 41

ஈஸ்பரன்சோதனைக் கென்னசெய்வோமிதற்
    கெப்படியாகிலும் நேரோ
வாஸ்துவமாகவே தானடக்குதிப்போ
    மன்னவா ஆண்டியைக் கூட்டிவாரும் 42

என்றுதிருநங்கை தானுரைக்கச்சிறுத்
தொண்டருங்கேட்டு மனமகிழ்ந்து
மன்றலர்பூணு மணிமார்பன்சிறுத்
தொண்டனும்ஆண்டியைத்தேடலுற்றார் 43

சோளன்பள்ளியிற் றனிருக்கத்திரு
நங்கையுஞ்சத்திரம் வீற்றிருக்கப்
பாராளுந்தொண்டன் பதிதனிற்றேடிட்டப்
பரமசிவன்கதை கேளுங்கொடி. 44

பரமசிவன்பர தேசியைப்போலொரு
பைரவரூபம் வடிவெடுத்து
ஹரஹரவென்றசொல் தப்பாமல்வெகு
அன்பாய்தள்ளாடி புகழ்ந்தவரும் 45

வேகமாய்நானும் வழிகூடிவிளை
யாடிக்குழந்தையைத் தான்பார்த்து
தாகமதாகவே வந்துநின்றுசிறு
தம்பியரோ இந்தப் பட்டணத்தில் 46

சீருந்தம்பி சிறுபிள்ளைகாள்சிறுத்
தொண்டன்மடமெங்கே செப்புமென்றார்
வாருமய்யா பரதேசியரோயந்த
மடத்தினிலன்னக் கொடிபரக்கும் 47

அல்லும்பகலுமே ஆண்டிகளைத்தேடி
அன்னமும்பாலுமே தான்தருவார்
செல்லுமய்யா மடந் தான்தேடிச்சிறுத்
தொண்டனங்கே யிருப்பார்காண் 48

என்றுசிறுவ ருரைத்திடவேசிறுத்
தொண்டன்மடந்தேடித் தானடந்தார்
மன்றில்நடம்புரி யுஞ்சிவனொரு
மடந்தனைத்தேடியே போம்பொழுது 49

திருச்செங்காட்டுத்தெரு வீதிஎங்குஞ்சங்கு
சேகண்டிசத்த முழங்கிடவே
அருட்பெருமன்ன மடத்தில்வந்துநின்
றன்பாயமுது படையுமென்றார். 50

அடர்த்தசங்கு முழங்கிடவே அந்த
ஆண்டியுமன்னந் தரச்சொலவே
மடத்திலுலாவுந் திருநங்கையாளுமே
வந்துபரதேசியைப் பணிந்து 51

2

அன்னமும்பால்பதி னெட்டுவகைக்கறி
யான்படைப்பேன் பசியாருமென்று
பன்னமெடுத்து விரித்திடவேஅப்போ
பரதேசியன்போடு சொல்லலுற்றார் 52

அன்னம்படைக்கிறே னென்றுசொன்னதுனக்
கன்புள்ளமன்னவ னெங்கேயென்றார்
தன்மையதாகச் சிவன்கேட்க அப்போ
தான்சொலுவாள் திருநங்கையுந்தான் 53

என்றுமாயிரம் பேர்தனக்கன்னம்
இடைவிடாதிங்கே கொடுத்துவந்தோம்
இன்றொருவ ரிவடம்வரவில்லை
என்றடியார்களைத் தேடலுற்றார் 54

என்றுதிருநங்கை சொல்லிடவே யதற்
கேதுசொல்வார்பர தேசியரும்
ஒன்றுமரியா துரைத்தாயே நல்ல
உத்தமியேதிரு நங்கையரே 55

சொன்னசொல்தப்பாத பைங்கிளியேதாயே
சோறுபடைக்கிறே னென்றுசொன்னாய்
மன்னவனில்லா மனைதனிலேசாதம்
மங்கையேநானும் பொசிப்பதில்லை 56

சித்தமாயன்னம் பொசிப்பதற்குத்
திருவாத்திபடியிலே வீற்றிருப்பேன்
உத்தமியேஉன் கணவன்வந்தாலங்
குறுதியுடன்வரச் சொல்லுமென்று 57

நேத்திரயதாக வுரைத்துவிட்டுநிமிஷ
நேரமதற்குள்ளே தானேகி
ஆத்திமரந்தனில் வீற்றிருந்தாரெங்க
ளாதிபரம சிவயோகி 58

பத்தன்சிறுத் தொண்டராசனுந்தான்
பரதேசியையெங்குந் தான்தேடி
சத்திரந்தன்னிலே வந்துநின்றுதொண்டர்
தையல்நல்லாளுடன் சொல்லலுற்றார் 59

இத்தனைநேரம்நான் தேடிவந்தேன்பர
தேசிகளெங்கெங்குங் காணமென்றார்
பத்தாவின்பாதம் வணங்கிநின்றுஅங்க
பைங்கிளியாள்திரு நங்கைசொல்வாள் 60

வாருமெனது மணவாளசாமி
வையகதர்ம பரிபாலா
ஆரோபெரிய பரதேசியன்பா
யன்னம்படையம்மா வென்றுசொன்னார் 61

அன்னம்படைக்கிறேன் சாப்பிடுமென்றதற்
கன்பாய்மணவாள ரெங்கேயென்றார்
அன்னம்பொசிக்கவே ஆண்டிகளைத்தேடி
யழைத்துவரப்போனாரென்றுசொன்னேன் 62

பத்தாவில்லாதமனைதனிலேபர
தேசிகளன்னம் பொசிப்பதில்லை
உத்தமியேயுன் கணவன்வந்தவுடன்
ஓடியேநான்வரச் சொல்லுமென்று 63

சித்தமகிழ்ந்து சிவயோகிதிரு
வாத்தியடியி லிருப்போமென்றார்
உத்தமரோநீ ரழைத்துவாருமென்
றுகந்துதிருநங்கை தானுரைத்தாள் 64

இந்தவிதந்திரு நங்கைசொல்லசிறுத்
தொண்டனுங்கேட்டு மனதுநொந்து
சிந்தைதமகிழ்ந்து சிறுத்தொண்டருந் திரு
நங்கையைப்பார்த்தவ ரேதுரைப்பார் 65

எங்கெங்குந்தேடியே தான்திரிந்தேன்பர
தேசிஒருவரை காண்கிலனே
திங்கள்முகத்தா[illegible]ள பெண்ணரசேஒரு
ஒ[illegible]நவரை காண்கிலனே 66

தேசங்களெங்கு[illegible] திரிந்தலைந்தேன்ஒரு
சித்தரையெங்கினுங் காணேனே
வாசலில்வந்திடு மாண்டியையவிட்டுநீ
வாகாயுரைப்பதென் வஞ்சியரே 67

என்றுசிறுத்தொண்ட ராசனுரைக்கவே
எந்திழையும்பின்பு ஏதுசொல்வாள்
இன்றுநீர்சொன்னது மெய்வசனமிப்போ
ஈசன்செயல்தனை யாரறிவார் 68

வாருங்களெந்தன் மணவாளசாமி
மன்னர்கள்மெச்சுங் குணசீலா
யாருந்திருவாத்தி தன்னிலேதான்பர
தேசியும்பள்ளி கொண்டேயிருப்பார் 69

இட்டமுடனே அழைத்துவாருமென்று
செப்பினளே திரு நங்கையுந்தான்
சட்டதிட்டமுடன் தான்தேடிக்கண்டு
சன்னாசிபாதம் நமஸ்கரித்து 70

சாஸ்திரவேத மறிந்தசிறுத்தொண்டன்
சன்னாசிபாதம் பணிந்துநிற்க
பார்த்திருகண்கள் களிகூர்ந்து அந்த
பண்டாரயோகியு மேதுசொல்வார் 71

கும்பிடுங்காரிய மெந்தனிடத்திலே
கூறுவாய்நீயெனக் கிப்போது
அன்புடனென்னை யழைத்தவகைதனை
யானறியச்சொல்லு மென்றுரைக்க 72

சாதம்புசிக்க வரவேணுஞ்சுவாமி
சன்னாசியாரே தவமுனியே
நீதமாய்ச்சொல்லிய தொண்டனைப்பார்த்தவர்
நிச்செயமாக உரைக்கலுற்றார் 73

அன்னம்புசிக்க எனையழைத்தாய்பத்தா
ஆனாலுமென்ன கறிபடைப்பாய்
என்னகறிவகை கேட்டாலுஞ்சுவாமி
என்னாலேதான்தர அருமையா 74

என்றுசிறுத்தொண்டன் சொல்லிடவேஅதற்
கேதுசொல்வார்தவ மாமுனியும்
இன்றுநீயென்மனம் போலேதருகிறே
னென்றுசொன்னாய்சிறுத் தொண்டனேநீ 75

கேட்டகறிவகை தாருமென்றாயகிலே
கோத்திரந்தன்னி லுயர்ந்தபிள்ளை
தாஷ்டிகவானா யிருக்கவேணுமிகச்
சாஸ்திரங்கற்ற சிறுவனுமாய் 76

ஒருத்திக்கொருமக னாகவேணும்உட
லொச்சமில்லாம லிருக்கவேணும்
தருமத்தயவு பொறுமையுடைய
சமத்துள்ளபிள்ளையாய்த்தான்வேணும் 77

தா[illegible]ன்மடியினிற் சேயிருக்கஅன்ற
தந்தையும்வாளாற கழுத்தறுக்க
தேய்[illegible]வில்லாமலே ஓர்மனதாய்நீயுஞ்
செய்துவைத்தாலமு துண்டிடுவேன் 78

என்றுசிவயோகி தானுரைக்கச்சிறுத்
தொண்டனுங்கேட்டு மனமகிழ்ந்து
நன்றதுதானென்று ஐயாவேயிப்போ
நாதனைகேட்ட கறிவகையும் 79

வேகமுடன்சமைத் தோடிவருகிறேன்
வீற்றிருமிந்த மாத்தினிலே
வாகுடனேசிறுத் தொண்டனுமப்போது
மாவேகமாகவே தானவரவே 80

மன்னவரே என்னுயிர்க்குயிரான
மணவாளா ஆண்டியை எங்கேயென்றாள்
அன்னேரமேசிறுத் தொண்டனுமப்போது
அன்பாய்மனையாளைக் கேதுரைப்பார் 81

செம்பவழத்திரு வாயழகிதிரு
நங்கையமே சிவயோகியுந்தான்
அன்புள்ளபாலன் றனையறுத்துக்கறி
யாக்கிறதெண்ணம் புசிப்பமென்றார் 82

நல்லதென்றுசொல்லி நானும்வந்தேனென்றன்
நாயகியுன்மன தெப்படியோ
சொல்லுக்குப்பேதகம் வாராமல்க்கறி
சுருக்காய்ச்சமைக்கனும் பொன்மயிலே 83

வந்தபரதேசி போகுமுன்னே என்
மனைவியே ஆண்டிக் கிசைந்தகறி
விந்தையுடனே சமைக்கவேணுமென்று
மெல்லிநல்லாளுடன் றானுரைத்து 84

பாண்டிசோன்சோழன் நாட்டினிலேகில்லை
பாலகன்பார்த்துதான் வாங்கிவர
ஆண்டிக்கிசைந்த குழந்தைவாங்கப்பெண்ணே
ஆயிரம்பொன்தாரு மென்றுரைத்தார் 85

மண்டலதர்ம பரிபாலன்மக
ராசன்சிறுத்தொண்டன் றானுரைக்க
வண்டலர்பூங்குழல நங்கையருமந்த
மன்னன்முகம்பார்த்து ஏதுரைப்பாள் 86

தோட்டத்தில் காய்கறி தானிருக்கச்சாமி
தூரத்தில்காய்கறி தேடுவதேன்
வாட்டமில்லாமல் சமைத்துவைத்தால்க்கறி
வைத்தவர்க்கல்லோ பலன்கிடைக்கும் 87

நம்பிடபிள்ளை தலையாத்துஇப்போ
நாமோதிகள் சமைந்துவைத்தால்
வம்மிசமுமேவும் தலைமுறைக்கு
மங்கைபாகன்கைலை பதங்கிடைக்கும் 88

என்றுதிருநங்கை தானுரைக்கத்தொண்ட
ரேகவேயள்ளிக் குடந்தனிலே
அன்றுசோரனுஞ் சொற்பனங்கண்டதாய
ஐயரிடந்தனிற் சொல்லுகிறான் 89

வாத்தியாரய்யரே இப்போதுஒரு
மாய்கைக்கனாக்கண்டேனென்றுசொல்ல
சாஸ்திரம்ஓதிடும் வாத்தியாரப்போது
சாற்றுவார் பாலகனைப்பார்த்து 90

சீமைசெழிக்கக் கனாக்கண்டாயோதம்பி
செங்கோல்தழைக்கக் கனாக்கண்டாயோ
தாமதமில்லாமல் மாதமும்மாரி
தளைத்தும்மழைபெய்யக் கண்டாயோ 91

என்னதான்சொற்பனங் கண்டாயடாதம்பி
எதுக்குநீயு மழுகிறாய்
சொன்னசொல்தப்பாத பாலகனுங்கண்ணீர்
சோரவிட்டேயவன் சொல்லலுற்றான் 92

சீமைசெழிக்கவும் நான்காணேனையா
செங்கோல்தழைக்கவும் நான்காணேன்
பூமியிலேயெனை யீன்றதோர்தந்தையும்
போக்குகழுந்தை யறுக்கக்கண்டேன் 93

இப்படியாய்ப்பாலன் சொல்லிடவேயதைக்
கேதுணைப்பாரந்த வாத்தியாரும்
அப்படியல்லடா தம்பியரோமுன்
னயனார்விதிப்படி தப்பாது 94

சொற்பனங்கண்டவர்க் கொன்றுமில்லையென
சொல்லிவாய்மூடுமுன் வாத்தியாரும்
செப்பமதாகத் திருத்தொண்டாசனும்
சோரனைத்தேடி வந்திடவே 95

தகப்பனைக்கண்டந்தச் சோரனங்கே
தாவியேவாத்தியார் பின்னொளிந்தான்
விசுப்பமில்லாமற் திருத்தொண்டாசனும்
விளம்புவான்தன்னுட மைந்தனிடம் 96

மைந்தனேவாடா யிங்கேதுரையே யெந்தன்
மாசில்லாமுத்தே மரகதமே
தந்தைமாதாகுரு வார்த்தைதனைத்தள்ளாத
தனையனேசீக்கிரம் நீவாடா 97

அம்மாளும்சம்மனை வந்திருக்காருன்னை
அழைத்துவரச்சொன்னா ராதலால்
சும்மாநீவாயெந்தன் ரத்தினமேயெனச்
சொல்லவும்வாரதியாரப்போது 98

சீக்கிரஞ்சாப்பிட்டு வாருமெனச்சொல்லி
சோறன்றன்னை யனுப்பிவைத்தார்
பாக்கியமென்றந்தப் பாலகனுங்குரு
பாதம்பணிந்து நமஸ்கரித்து 99

ஆதரவாக வருகையிலேபெற்ற
அன்னையைபார்த்தவனே [illegible]
மாதவஞ்செய்து எனைப்பெற்றதாயேயென்
மாமனெங்கே யெனக்கேட்க

இன்னேரம்வரையி லிங்கிருந்திப்போ
தெழுந்துபோயினா [illegible]
உன்னைவந்தாலிங் கிருக்கச்சொல்லியப்பா
உன்மாமன்போனா ரெனவுரைத்து 101

இப்படிச்சொல்லி மடத்தினிலு [illegible]
ரிருக்கையில்வெண்காட்டு [illegible]
செப்பமுடனேதான் பாலனுக்குஎண்ணை
தேய்த்துமே சீயக்காய்தானளைத்து 102

தலைமுழுகாட்டியே ஈரந்துடைத்தங்க
தம்பிசிறாளனுக் காங்குதற்கு
சிலைநுதல்வேல்விழி மங்கையருமப்போ
சேயனைவாரியே முத்தமிட்டு 103

தங்கத்தாலாஞ்சலிற் றான்போட்டுஅந்த
தையல்திருநங்கை தாலாட்ட
திங்கள்முகத்தாளை கண்ணூறாங்காயென்று
நங்கையுமப்போது தாலாட்ட 104

ராரிசரோவென்று தாலாட்டிஎந்தன்
[illegible]

O-85MVP,C
M10

என்றுதிருநங்கை தாலாட்டவவ
னேகாந்தமாகவே கண்மூடி.
இன்றோதிசெயமுண்டோஇவன்செய
லெப்படியாகுமோ வென்றுணர்ந்து. 106

பொய்யுறக்கங்கொண்டு சீராளனந்தப்
பொன்னூஞ்சல்மீதிற் படுத்திருக்க
மெய்யுறக்கமென நங்கையிருமவன்
மேனியசையாம லேதூக்கி 107

தூக்கியமைந்தனைத் தன்றுடையில்வைத்து
தோகைதிருநங்கை கைபிடிக்கச்
சீக்கிரங்கத்தியைத் தாவெடுத்துக்கொண்டு
சீராளன்றந்தையு மப்போது 108

சந்தனநங்கை தலைபிடிக்கஅந்த
தையல்திருநங்கை கால்பிடிக்க
சுந்தரந்தன்னை மனதிலெண்ணிச்சிறுத்
தொண்டனுங் கத்தியைத்தான்பிடித்து 109

சழுத்தையறுத்துத் திருநங்கைதன்னிடங்
காவலன்றானுங் கொடுத்திடவே
அழுத்தமுடனே அறுத்ததலைதனை
அப்புறம்வையென்று தானுரைத்தார் 110

மடக்கொடிசந்தன நங்கையுமப்போது
மைந்தன்தலையை யெடுத்துவைத்து
உடற்கறிதன்னையும் பாகமதாக
ஒருநொடிதன்னிற் சமைத்துவைத்து 111

செவ்வையதாக பெறும்பைக்கறிசெய்து
திவ்வியமான ரசங்கள்வைத்து
ஒவ்வோர்கறிகளுந் துண்டுதுண்டாகவே
ஒண்டொடியாளுஞ் சமைத்தபின்பு 112

இன்பமுடன்திரு நங்கையுமப்போது
எதியேதொண்ட ரிடந்தனிலே
அ…ருக்கான கறிகளெல்லாஞ்சமைத்
தாச்சுதுஆண்டியைக் கூப்பிடுங்கள் 113

என்றுதிருநங்கை சொல்லிடவே அதற்
கின்பம்பெருகியே தொண்டருந்தான்
இன்றுபோய்க்கூட்டி வருகிறேனென்று
எழுந்துபரமனைத் தானினைந்து 114

காத்திருப்பாரெனத் தானிருந்துதொண்டர்
கடுகநடந்தோடி யன்புடனே
ஆத்திமாத்திலே வீற்றிருக்கின்றதோ
ராண்டியைக்கண்டு நமஸ்கரித்து 115

வந்துஅமுது பொசித்தருளுமய்யா
மாமுனியேபர தேசியரோ
இந்தோவந்தேனெனச் சொல்லியவரு
மெழுந்துதள்ளாடி நடந்துவந்தார் 116

மண்டலதர்ம பரிபாலன்பின்னே
வந்தார்பரம சிவனாரும்
கண்டுதிருநங்கை தானெழுந்துவந்து
காலில்விழுந்து நமஸ்கரித்து 117

தங்கத்தால்செம்பில் செலமோர்ந்துவந்து
தையல்திருநங்கை தான்கொடுக்க
இங்கிதமாகவே செம்புஜெலத்தையும்
ஈஸ்பரர்க்குத்தொண்டன் கால்கழுவி 118

வந்துபரமன் மடந்திருக்க அந்த
மங்கைதிருநங்கை தானோடி
சந்தனநங்கையைத் தானழைக்க அவள்
சாதத்தைதட்டிலே தானெடுத்து 119

வாழையிலைதனைத் தான்விரித்துஅந்த
மஙகைதிருநங்கை சொல்ப்படிக்கி
வேளையிற்சந்தன நங்கையுஞ்சாதத்தை
மெல்லிநல்லாள்கையிற் றான்கொடுக்க 120

வாறியேசோறு கறிபடைத்தாளந்த
மங்கைதிருநங்கை கையாலே
சாரியதாகவே புத்துருக்குநெய்யுந்
தாரைவிட்டோட்டவே வார்த்துநின்றாள் 121

பத்தன்சிறுத்தொண்ட னைப்பார்த்துப்பர
தேசியும்ப்போது யேதுசொல்வார்
இந்தப்படிக்கிக் கறிசமைத்தாயிப்போ
செய்ததுஞாயஞ் சரிதானோ 122

உடற்கறிவைத்ததே யல்லாதுபின்
தலைக்கறியில்லையே தொண்டனேபார்
நடக்கையுனக்கிது வோவெனச்சொல்லப்பின்
நாயனுருந்திரு நங்கைதனை 123

திங்கள்முகத்தாளே பெண்ணாசேதலை
எங்கேயென்றுதானுங் கேட்டிடவே
மங்களமாகச் சிராளன்தலைதனை
மாதுஞ்சமைத்துக் கறிபடைத்தாள் 124

சித்தர்மகிழ்ந்து அருள்புரிந்துதிரு
நங்கைமனதின் குறிப்பறிந்து
இத்தலந்தன்னிலே இப்படிசெய்பவர்
எங்கினும்எப்போதுங் கண்டதில்லை 125

என்றுவாருஞ்சிறுத் தொண்டரோ இப்போ
திருந்துஅமுதுண்ண வோர்குழந்தை
சென்றுஅழையுமென் றேயுரைக்கச்சிறுத்
தொண்டனுமப்போது சொல்லுகிறார் 126

ஈஸ்பரன்தந்தது ஓர்குழந்தைதனை
இப்போதுமக்குக் கறியாக
காசினியெங்குந் தனித்தோங்கக்
கயிலாசர்கிறுபை யதனாலே 127

கொண்டுவந்துகறி தான்சமைத்தேனென்
குலக்கொழுந்தாகிய பாலகனை
கண்டிருந்துபாலன் வேணுமென்றுல்லாந்தன்
கர்த்தாவேயென்செய்வே னென்றுசொல்லி 128

தாராளமாக நமஸ்கரிக்கச்சித்தர்
சந்தோஷமாய்த்திரு வாக்குரைப்பார்
பாராளும்பாலகன் பேரைச்சொல்லியும்
பாதையிலேநின்று தானழையும் 129

என்றுசிறுத்தொண்ட னுக்குரைக்க அப்போ
 ஈஸ்பரன்றன்னை நமஸ்கரித்து
சென்றுசீராளனைத் தானழைக்கச்சிறுத்
 தொண்டனுமப்புறந் தானேகி 130

முச்சந்திவீதியில் தொண்டரழைக்கவே
 முன்னாகச் சீராளனோடிவந்து
அச்சமில்லாமலே பாலகனுமப்போ
 அய்யாயிதோவந்தே னென்றுவந்தான் 131

வந்ததோர்பாலனைக் கூட்டிக்கொண்டேயந்த
 மாமுனிவரிடம் வாருமென்று
சந்தோஷமாய்ச்சிறுத் தொண்டனுந்தான்வர
 சன்னாசியாரு மறைந்துவிட்டார் 132

சிந்தைகலங்கி மெலிந்துடல்வாடியே
 செப்புவாரேசிறுத் தொண்டருந்தான்
வந்ததோராண்டிமா தேவனல்லால்வேறு
 மாமுனியில்லையென் றேநினைந்து 133

சந்திரசேகரனே சரணஞ்சிவ
 சங்கரனே சரணஞ்சரணம்
இந்தவேளையினில் வந்துரட்சித்துநீ
 யெங்களைக்காப்பாற்ற வேணுமென்று 134

பத்தன்சிறுத்தொண்ட னுந்திருநங்கையும்
 பரங்காய்த்தியானித் திருக்கையிலே
சித்தமகிழ்ந்து சிவனுருமுந்தி
 சீக்கிரந்தான்தர வேணுமென்று 135

சீருடன்ரிஷப வாகனமீதேறி
 பார்பதியோடுமே வந்துநின்று
வாருங்காணுஞ்சிறுத் தொண்டனேஉன்னைப்போல்
 வையகந்தன்னிலே நான்காணேன் 136

என்றுபரம சிவனுரைக்கஅதற்
 கேந்திழையாளுஞ் சிறுத்தொண்டனும்
அன்றுஅரனைத்தான்பணிந்து இவ
 ரன்பாகத்தோத்திரஞ் செய்யலுற்றார் 137

அம்பிகைபாகா சரணஞ்சரணம்மென்
　　னாண்டவனே சரணஞ்சரணம்
சம்புசதாசிவனே சரணஞ்சச்சி
　　தானந்தனே சரணஞ்சரணம் 138

அரிஅயன்தேடியுங் காணாத எந்த
　　னையனே உந்தன் பாதஞ்சரணம்
சிறியேனைக்காத்து ரட்சித்தருளுஞ்செக
　　தீஸ்பரனே சரணஞ்சரணம் 139

இப்படியாக இவர்கள் துதிக்கப்பின்
　　ஈஸ்பரனருட மாய்கையினால்
செப்பும்விமானம்ஒன் றப்போவரச்செய்து
　　சிறுத்தொண்டற்குந்திரு நங்கையர்க்கும் 140

பாலகனான சீராளனுக்கும் இவர்
　　பாங்கியர்சந்தன நங்கையர்க்கும்
சாலோகசாமீப சாரூபமேலான
　　சாயுச்சியமென்ற பதங்கொடுத்து 141

மங்களமாக இன்னல்வளையுங்கைலை
　　வாகுடன்சேர்த்து மகிழ்வாக
திங்களணிந்திடும் ஈஸ்வரருஞ்செக
　　தீஸ்வரியுங்கைலை வீற்றிருந்தார் 142

பத்தன்சிறுத்தொண்டன் கும்மிதனைஇந்தப்
　　பாரில்படிப்போருக் கும்வாழி
சித்தமகிழ்ந்திச் சரிதைதனைக்கேட்டிடுந்
　　தேவிமார்வாழத் தினம்வாழி 143

நன்மையுதான சிறுத்தொண்டன்கும்மியை
　　சந்தோஷமாக மனமகிழ்ந்து
தன்மையுடனிதை அச்சிலிட்டோர்கள்
　　நலம்பெற்றுவாழவும் வாழியதே, 144

சிறுத்தொண்ட நாயனார்

திவ்வியசரித்திரக்கும்மி

முற்றிற்று.